1973 ஏப்ரல் 2]

அதிகரிக்கும். ஐந்து மைல், ஆறு மைல், ஏழு மைல் என்று சுற்றிச் சுற்றிச் செல்லுகின்ற அந்த நிலைமைகள் இனி வராது என்று அரசு கருதுகிறது.

திரு. த. சோனையா : பேராசிரியர் அய்யாசாமி அவர்கள் திட்டத்தின்படி முதல் முதலாக அப்படி பேருந்துகளை விடுகின்ற நாளில் மக்கள் அதிலே ஓசியாகப் பிரயாணம் செய்ய அனுமதிக்கப் பட்டால் அதுவே ஒரு விளம்பரமாக அமையும். அரசு அதைச் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஓசிப் பயணம் எங்கு எப்போது நடந்தாலும் தடுக்கப்பட வேண்டிய ஒன்று.

பிராட்வேயிலிருந்து பேருந்துகள்

609 வின—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வழித்தடம் எண் 92-ஐ பிராட்வே வரை நீட்டிக்கும் திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 22—1—1973 ஆம் நாள் முதல் வழித்தடம் எண் 92 (தங்கசாலை—ஊத்துக்கோட்டை) தங்கசாலையிலிருந்து பிராட்வே வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : நீட்டித்ததற்கு நன்றி சொல்லுகிற அதே நேரத்தில் அந்த வழித் தடங்களில் தற்போது ஓடிக் கொண்டிருக்கின்ற பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளாக விட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பழையதை முற்றிலும் மறந்து விட வேண்டியதில்லை.

610 வின—திரு. கா வேழவேந்தன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 90 (சுண்ணாம்புக்குளம்—தங்கசாலை) பேருந்துகளை சென்னை உயர்நீதி மன்றம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?